DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

SESSIONS CASE NO. 227 / 2024

| Deposition of Witness for | Prosecution PW6<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Tmt. Bhuvaneswari |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17th day of August, 2026.

(A1 to A3 are present )

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.17 மணி

நான் தற்போது கிண்டி வட்டத்தில் தனி வட்டாசியராக சமூக பாதுகாப்பு திட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். 2024 பெரம்பூரில்நான் வட்டாசியராக பணியில் இருந்தபோது 09-02-2024 அன்று கமல் ஆனந்த் த/பெ. கோதண்டபாணி, EVP

பார்க் அவென்யூ, அய்யப்பன்தாங்கல் என்பவரின் சாதி சான்றிதழ் மெய்தன்மை கோரி மனு பெறப்பட்டது. மேலும் சந்திரசேகர் த/பெ. பாலசுப்பிரமணியம், 24/23, வெங்கட்ராமன் தெரு, பெரம்பூர், சென்னை என்பவரின் சாதி சான்றிதழ் கோரி மனு பெறப்பட்டது. மேற்படி வேண்டுகோள் கடிதங்களின் பேரில் சந்திரசேகர் த/பெ. பாலசுப்பிரமணியம் என்பவருக்கு ஆன்லைனில் சாதி சான்றிதழ் ஆதிதிராவிடர் வகுப்பே சேர்ந்தவர் என்று சான்றிதழ் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது. கமல் ஆனந்த் என்பவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சாதி சான்றிதழில் அவர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்றுஏற்கனவே 1989 வழங்கப்பட்டுள்ளது. அதன் உண்மை தன்மை குறித்து சான்று வழங்கினேன். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். கமல் ஆனந்த் என்பவருக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழின் மெய்தன்மை குறித்து சான்றிதழ் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3 ஆம் எதிரி சந்திரசேகர் த/பெ. பாலசுப்பிரமணியம் என்பவருக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழின் மெய்தன்மை குறித்து சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

கமல் ஆனந்த் என்பவருக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ் முன்கோப்பு எதையும் நான் பார்க்கவில்லை என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். முன்கோப்புகள் கிடைக்கவில்லை. கள விசாரணைக்கு வருவாய் ஆய்வாளரை அனுப்பினோம். முன்கோப்பு பதிவறையில் ஏன் இல்லை என்பதற்கான காரணங்களை அலுவலகத்தில் கேட்டு பெறவில்லை என்றால் பெரம்பூர் வட்டாட்சியர் இட பற்றாக்குறையால் இடமாற்றம் செய்யப்பட்டது. ஆகவே இடமாற்றம் காரணமாக கோப்புகளை கண்டுபிடிக்கமுடியவில்லை. பதிவறை எழுத்தரின் அறிக்கை நான் புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. கமல் ஆனந்தனின் பெற்றோரின் சாதி சான்றிதழை வருவாய் ஆய்வாளர் கேட்டு பெறவில்லை என்றால் வருவாய் ஆய்வாளர் கள விசாரணை செய்தார். சான்றிதழ் அவர்களிடம் இருந்ததா என்று உறுதி செய்யவில்லை. வருவாய் ஆய்வாளரிடம் அறிக்கையையும் போலீசார் விசாரணையில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. கமல் ஆனந்த் தற்போது வசிக்கும் முகவரியில் கள விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அய்யப்பன்தாங்கல் எங்கள் அலுவலக அதிகார வரம்பிற்குள் வராது ஆகவே அவர்களை அலுவலகத்திற்கு வரவழைத்து விசாரித்தோம். கமல் ஆனந்த் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்டார் என்று அவர் வசிக்கும் இடத்தில் உள்ள தாசில்தாரை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். புகார்தாரர் தற்போது பட்டியல் இனத்தை சேர்ந்தவர் அல்ல என்றால் சரியல்ல. நான் எங்கள் வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கையின் படி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 1989 ல் கொடுக்கப்பட்ட சாதி சான்றிதழின் மெய்தன்மை குறித்து தான் கோரியிருந்தார்கள். புகார்தாரர் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் அல்ல என்பதால் எங்கள் அலுவலகத்தில் முன்கோப்புகள் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur